**<u>சார்பு நீதிமன்றம், ஊத்தங்கரை</u>**

**<u>முன்னிலை</u>: திரு.பா.திருஞானசம்பந்தம், பி.ஏ., பி.எல்.,**

சார்பு நீதிபதி

ஊத்தங்கரை.

திருவள்ளுவர் ஆண்டு 2057 விசுவாவசு வருடம் மாசி திங்கள் 28-ம் நாள்

2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 12-ம் நாள் வியாழன்கிழமை

**<u>அசல் வழக்கு எண்.63/2019</u>**

**<u>C.N.R.No.TNKI11000188-2019</u>**

முருகன்

... வாதி

**// எதிராக //**

1. கிருஷ்ணன்

2. ஊமையன் (எ) குப்பன்

3. உண்ணாமலை

4. தனலட்சுமி

5. கோவிந்தசாமி

6. ரேனு

...பிரதிவாதிகள்

இவ்வழக்கு என் முன்பாக 12.03.2026 அன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.வடிவேல், அவர்கள் ஆஜராகியும், D3 முதல் D5 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.தண்டபாணி, அவர்கள் ஆஜராகியும், D1, D2 இறப்பு, D6 பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் யாரும் ஆஜராகததால் அவர்களை தோன்றாதரப்பினர்களாக்கப்பட்டும், வாதி தரப்பில் எவ்வித பிரதிநிதித்துவமும் இல்லாததாலும், மேல் நடவடிக்கை எடுக்காததாலும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்..

**<u>தீர்ப்புரை</u>**

தாவா சொத்தை நலம் தீது கலந்து அளந்து 2 சமபாகங்களாக பிரித்து அதில் ஒரு பங்கினை வாதிக்கு பிரித்துக்கொடுத்து தனி சுவாதீனம் கிடைக்க முதல் நிலை

தீர்ப்பாணை பிறப்பித்தும், கனம் நீதிமன்றம் முதல் நிலை தீர்ப்பாணை பிறப்பித்த பின்பும் பிரதிவாதிகள் வாதிக்குரிய பாகத்தினை வாதிக்கு பிரித்து வழங்காத பட்சத்தில் ஒரு இறுதி நிலை தீர்ப்பாணை பிறப்பிக்க தகுந்த வகை செய்து உத்தரவிட்டும், ஊத்தங்கரை சார்பதிவக ஆவண எண் 2055/1974-ன் படி செய்யப்பட்டுள்ள பத்திரத்தினை ரத்து செய்து ( Declered as Null and Void) என அறிவித்தும், ஊத்தங்கரை சார்பதிவக ஆவண எண் 3435/2018-ன் படி 3-ம் பிரதிவாதி பெயரில் ஏற்படுத்தியுள்ள கிரைய பத்திரத்தினை ரத்து செய்து ( Declered as Null and Void) என அறிவித்தும், வழக்கு சார்வே எண் சொத்தை குறித்து 2-ம் பிரதிவாதி 5-ம் பிரதிவாதி பெயரில் 04.09.2018-ம் தேதியில் ஏற்படுத்தியுள்ள ஊத்தங்கரை சார்பதிவக பத்திர எண் 3434/2018 தான செட்டில்மெண்ட் பத்திரம் சட்டபடி செல்லாது ( Declered as Null and Void) என அறிவித்தும் மற்றும் தாவா செலவுத் தொகை கேட்டும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

IA 7/2022, IA 08/2023, IA 11/2023 are dismissed. Hence this suit is dismissed for default. No cost.

இன்று (12.03.2026) இந்நீதிமன்றத்தில் தீர்ப்புரை என்னால் அவையறிய பகரப்பட்டது.

ஓம்/-திரு.பா.திருஞானசம்பந்தம்,பி.ஏ.,பி.எல்.,
சார்பு நீதிபதி,
ஊத்தங்கரை.

<u>வாதி தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் - இல்லை .</u>

ஓம்/-திரு.பா.திருஞானசம்பந்தம்,பி.ஏ.,பி.எல்.,
சார்பு நீதிபதி,
ஊத்தங்கரை.